# In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.

O.S.No.87/2022 தேதி-24.03.2026
(DW.1) – ஜாண்பாஸ்கோ

**வாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி-**

1.இந்த வழக்கின் வாதி என் மனைவியின் சகோதரர் என்றால் சரிதான். வாதி சிறுவயதில் இருந்தே மீன்பிடி தொழில் தான் செய்து வருகிறார் என்றாலும், தற்போது மீன்பிடித் தொழில் செய்து வருகிறார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகயை யார் வழக்கறிஞருக்கு சொல்லிக் கொடுத்தார்கள் என்றால் நான் தான் சொல்லிக் கொடுத்தேன். மேற்சொன்ன சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நான் படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேனா என்றால் படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன்.

2. என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை என்றாலும், என் மனைவியின் கையொப்பம் என்றால் சரிதான், என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சத்திய பிரமாண வாக்குமூலம் சட்டப்படி ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள நபர் யார் என்றால் 2 வது பிரதிவாதி ஜெசிந்தா, மற்றொரு புகைப்படத்தில் வலது பக்கத்தில் இரண்டாவதாக இருக்கும் நபர் என்னுடைய மனைவி என்றால் சரிதான். அந்த புகைப்படம் வா.சா.ஆ.12 மற்றும் வா.சா.ஆ.13 ஆகும்.

3.தற்போது என்னிடத்தில் காண்பிக்கப்படும் புகைப்படமானது, 01.12.2025 ஆம் தேதி நடைபெற்ற திருமணத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படமாகும் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்ன இருவரும் நல்ல உடல்நிலையில் தான் உள்ளார்கள் என்றாலும், நான் வழக்கிற்காக உடல்நிலை சரியில்லாமல் இருக்கிறார்கள் என்று பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல, இன்றும் திருவனந்தபுரத்தில் உள்ள கிம்ஸ் மருத்துவமனைக்கு சிகிக்சைக்காக சென்றுள்ளார்.

4.வழக்கு பட்டிகை சொத்து 13.07.1994 ல் என் மனைவியின் அப்பாவான ஜார்ஜ் விலைக்கு வாங்கிய சொத்து என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் ஆவண எண்.1264/1994 என்றால் சரிதான். அதே தேதியில் தான் என் பெயரிலும், 2 வது பிரதிவாதியின் கணவரின் பெயரிலும் தனித்தனியாக 4.500 செண்ட் சொத்து எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். என் பெயரில் உள்ள ஆவணத்தின் ஆவண எண்.1263 /1994 என்றால் சரியல்ல.

5.2 வது பிரதிவாதியின் கணவரின் பெயரில் உள்ள ஆவணத்தின் ஆவண எண்.1265/1994 என்றால் சரிதான். மூன்று கண்டங்களும் சேர்த்து மொத்தமாக 13.500 செண்ட் மரியகுரூஸ் என்பவருக்கு உரிமைப்பட்ட சொத்து என்றால் சரிதான். மேற்சொன்ன சொத்தை எழுதி வாங்குவதற்கு முன்பு மரிய குரூஸ் என்பவரை தெரியாது என்றால் சரிதான். 13.500 செண்ட் ஒரு கண்டமாக இருந்தது என்றால் சரிதான். மேற்சொன்ன கண்டத்தின் கிழக்கு வழக்கு பட்டிகை சொத்து அமைந்துள்ளது என்றாலும், மேற்கு பக்கம் என்னுடைய சொத்து அமைந்துள்ளது என்றாலும், நடுப்பகுதியில் 2 வது பிரதிவாதியின் கணவர் ஆன்ரோஸ் என்பவரின் சொத்து அமைந்துள்ளது என்றாலும் சரிதான்.

6.மேற்சொன்ன விலை ஆவணம் ஏற்படுத்தப்பட்ட பிறகு அவரவர் சொத்தில் தனித்தனியாக வீடு வைத்து அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்துகளில் வாதியும், அவருடைய அப்பாவும் சேர்ந்து வீடு அமைத்து வசித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேற்சொன்ன வீட்டில் தான் வாதியும், அவருடைய குடும்பமும், அவருடைய அப்பா மற்றும் அம்மாவும் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான்.

7.வாதியின் அப்பா மேற்சொன்ன வீட்டில் தான் இறந்தார் என்றால் சரிதான். வாதியின் அப்பா மற்றும் அம்மாவின் மருத்துவ செலவுகளையும் மற்ற செலவுகளையும் வாதி தான் பார்த்துக் கொண்டார் என்றால் சரியல்ல. வாதியின் அம்மா இறப்பதற்கு ஏழு நாட்களுக்கு முன்பாக 2,3 பிரதிவாதிகள் வாதி வீட்டில் இல்லாத சமயத்தில் வீட்டிற்கு வந்து படுக்கையில் இருந்த வாதியின் தாயாரை வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றார்கள் என்றால் சரியல்ல.

8.மாமனாரையும், மாமியாரையும் ஒரு போதும் 2, 3 பிரதிவாதிகள் பார்த்துக் கொள்ளவில்லை என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகளின் திருமணத்தின் போது நகைகள் மற்றும் சீர்வரிசை கொடுத்து திருமணம் செய்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். என் திருமணத்தின் போது ரூ.1,00,000/- ரொக்கமாக வழங்கப்பட்டது என்றால் சரிதான். 2 வது பிரதிவாதியின் திருமணத்தின் போது ரூ.50,000/- ரொக்கமாக வழங்கப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

9.வாதிக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் தெரியாது. 10.07.1995 ல் வாதிக்கு திருமணம் நடைபெற்றது என்றால் நினைவில் இல்லை. பட்டிகை சொத்தில் வீடு வைத்ததில் என் மாமனாருக்கு கடன் இருந்தது என்றால் இல்லை. வீடு அமைத்ததில் கடன் இருந்ததால் வாதியின் மனைவியின் நகைகளை அடமானம் வைத்து வாதி கடன் தொகையை செலுத்தினார் என்றால் சரியல்ல. என் மாமனாருக்கு வயது முதிர்வு காரணத்தினால் அவரால் வேலை செய்ய முடியாததால் வாதியும் சேர்ந்து தான் எங்கள் திருமணத்திற்கு செலவு செய்து நடத்தி வைத்தார்கள் என்றால் சரியல்ல.

10.13.07.1994 ல் விலைக்கு வாங்கப்பட்ட இவ்வழக்கு பட்டிகை சொத்து வாதிக்கு தேவைப்படும் என்பதால் சொத்து விலைக்கு வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. வாதியின் அப்பா உயிரோடு இருக்கும் காலத்தில் வாதிக்கு தான் சொத்து என்று சொன்னதன் அடிப்படையில் தான் 07.01.2009 ஆம் தேதியில் 1 வது பிரதிவாதி வாதியின் பெயருக்கு ஒரு சம்மத பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த சம்மத பத்திரத்தில் என் மனைவியும், 2 வது பிரதிவாதியும் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால்சரியல்ல, போலியாக உருவாக்கப்பட்ட ஆவணமாகும்.

11.அந்த சமயத்தில் 2, 3 பிரதிவாதிகள் வாதியிடமிருந்து தலா ரூ.50,000/-த்தை பெற்றிருந்தார்கள் என்றால் சரியல்ல. வாதியின் பெயரில் வேறு சொத்துக்களோ, வீடோ உள்ளதா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வாதிக்கு பட்டிகை சொத்தை தவிர, வேறு சொத்துக்கள் ஏதும் வாதியின் பெயரிலோ, வாதியின் மனைவி பெயரிலோ இல்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வழக்கு பட்டிகை சொத்தை விலைக்கு வாங்கிய சமயத்தில் வாதிக்கு திருமணம் நடைபெறவில்லை

என்றால் சரிதான். அதனால் தான் வாதி வாங்கிய சொத்தை அவருடைய தந்தையின் பெயரில் விலைக்கு வாங்கினார் என்றால் சரியல்ல.

12.2,3 பிரதிவாதிகளுக்கு திருமணம் நடைபெற்றதால் தான் வாதியின் தகப்பனார் என் பெயரிலும், 2 வது பிரதிவாதியின் கணவரின் பெயரிலும் 4.500 சென்ட் சொத்தை விலைக்கு வாங்கினார் என்றால் சரியல்ல. வாதிக்கு மொத்தம் எத்தனை பிள்ளைகள் என்றால் மூன்று பிள்ளைகள், ஒரு பெண் பிள்ளையும், இரண்டு ஆண் பிள்ளைகளும் உண்டு. அதில் மூத்த மகனுக்கு விரல்கள் ஏதும் இல்லாமல் மாற்றுதிறனாளியாக உள்ளார் என்றால் சரிதான்.என்னுடைய பிள்ளைகளுக்கும், 2 வது பிரதிவாதியின் பிள்ளைகளுக்கும் திருமணம் நடைபெற்றுவிட்டது என்றால் சரிதான்.

13.வாதியின் அப்பா வாக்கால் வழக்கு பட்டிகை சொத்து வாதிக்கு உரிமைப்பட்டது என்று சொன்னதன் அடிப்படையில் தான் 2009 ல் சம்மத பத்திரமும், ஒரு செட்டில்மென்ட் ஆவணமும் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. 07.01.2009 ஆம் தேதியிட்ட சம்மத பத்திரத்தின் அடிப்படையில் தான் பேரூராட்சி அதிகாரிகள் பிரதிவாதிகளிடம் விசாரணை நடத்தி வாதியின் பெயரில் கரம் செலுத்தி ரசீது வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. 12.01.2009 ல் இருந்து வாதியின் பெயரில் தான் வழக்கு பட்டிகை சொத்திற்கு கரம் செலுத்தப்பட்டு வருகிறது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

14.20.01.2021 ஆம் தேதியில் 2, 3 பிரதிவாதிகளும், நானும் மற்ற நபர்களும் சேர்ந்து வாதி மற்றும் அவரின் குடும்பத்தாரை வழக்கு பட்டிகை சொத்தில் இருந்து வெளியேற்ற முயற்சி செய்தோம் என்றால் சரியல்ல. மேற்சொன்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதால் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்ய அவசியம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

15. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 ஆவணமானது 1வது பிரதிவாதி 2, 3 பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த சொல்லப்படும் விடுதலை பத்திரம் ஏற்படுத்தப்பட்டதாக சொல்லியுள்ள நிலையில் 1வது பிரதிவாதிக்கு அதை எழுதிக் கொடுக்க அதிகாரம் ஏதும் இல்லை என்றால் சரியல்ல, வாரிசு உரிமைப்படி எழுதிக்

கொடுக்க அதிகாரம் உள்ளது. பி.வா.சா.ஆ.1 ஆவணம் சட்டப்படி ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கை பற்றியும், வழக்கு பட்டிகை சொத்தை பற்றியும் எதுவும் தெரியாது என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு வழக்கு செலவுத் தொகையுடன் தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.